சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலம் – 2021 – 2022–ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – சிறப்பாக செயல்படும் மூன்று மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு விருதுகள் வழங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி 2) துறை**

**அரசாணை (நிலை) எண். 59**

**நாள் 10.11.2021**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ, ஐப்பசி 24**

**படிக்கப்பட்டது :**

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.அ2/ 5708/2021, நாள் 17.09.2021.

*******

**ஆணை :-**

2021–2022 – ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

"மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் உள்ள அலுவலர்களின் செயல்பாடுகளை அங்கீகரிக்கும் வகையிலும் மாவட்ட அளவிலான அலுவலர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் சிறப்பாக செயல்படும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு விருதுகள் 50 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் இயக்குநர்களின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்களுக்கான கல்வி, பொருளாதார

முன்னேற்றத்திற்கான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், மாவட்ட அளவில் இத்திட்டங்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் நிர்வாகத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கும் மற்றும் மாவட்ட நிர்வாகத்தினை சிறப்பாக மேலாண்மை செய்வதற்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், அரசால் அறிவிக்கப்படும் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பாக செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களில் மூன்று அலுவலர்களுக்கு ரூ.50,000/- செலவில் கேடயங்கள் / நினைவுப் பரிசுகள் ஒவ்வோர் ஆண்டும் வழங்கிடலாம் என்று பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

4. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் பரிந்துரையை அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று 2021-2022 - ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் சிறப்பாக செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களில் மூன்று அலுவலர்களைத் தேர்வு செய்து கீழ்க்கண்டவாறு ரூ.50,000/-செலவில் (ருபாய் ஐம்பதாயிரம் மட்டும்) கேடயங்கள், நினைவுப் பரிசுகள் வழங்க ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. தகுதியுடைய அலுவலர்களை தெரிவு செய்தபின் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

| **வ.எண்.** | **விருதுகள் விபரம்** | **செலவினம்** |
|---|---|---|
| 1 | முதல் பரிசு | ரூ.20,000/- |
| 2 | இரண்டாம் பரிசு | ரூ.15,000/- |
| 3 | மூன்றாம் பரிசு | ரூ.10,000/- |
| | விருதுகள், கேடயங்கள் மற்றும் நிகழ்ச்சிக்கான செலவினம் | ரூ. 5,000/- |
| | **மொத்தம்** | **ரூ.50,000/-** |

5. சிறப்பாக செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களை தேர்வு செய்து பரிசுகள் வழங்கும் பொருட்டு கீழ்க்கண்டவாறு தேர்வுக்குழுவை அமைத்திடவும் அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| 1 | துணை இயக்குநர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம். |
| 2 | துணை இயக்குநர்,<br>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம். |
| 3 | துணை இயக்குநர்,<br>சிறுபான்மையினர் நல இயக்ககம். |
| 4 | இயக்குநரின் நேர்முக உதவியாளர்,<br>பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம். |
| 5 | ஆணையரின் நேர்முக உதவியாளர்,<br>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம். |
| 6 | இயக்குநரின் நேர்முக உதவியாளர்,<br>சிறுபான்மையினர் நல இயக்ககம். |
| 7 | சிறப்பு அலுவலர் (திட்டம்),<br>பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம். |

மேலும், இக்குழு ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் ஆற்றிய பணிகளை பரிசீலனை செய்து விருதுகள் வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

6. சிறப்பாக செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களின் செயல்பாடுகளை பின்வருமாறு மதிப்பீடு செய்து, ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் 10 மதிப்பெண் வீதம் வழங்கப்பட்டு எந்த அலுவலர் அதிக மதிப்பெண் பெறுகிறாரோ அதன் அடிப்படையில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் பரிசு நிர்ணயம் செய்யப்படும்.

| வ. எண் | அளவுகோல்கள் / செயல்பாடுகள் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | மாவட்டத்தில் உள்ள மொத்த விடுதிகளில் அதிகப்படியான விடுதிகளை ஆய்வு செய்தது (பார்வையிட்டது) | 10 |
| 2. | கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை சிறப்பான முறையில் செயல்படுத்தியது. | 10 |

| | | |
|---|---|---|
| 3. | விடுதிகளில் மாணவ/ மாணவியர்களின் சேர்க்கைக்கு அதிகளவில் ஊக்கப்படுத்தியது மற்றும் விடுதி மாணவ / மாணவியர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு சிறப்பான முறையில் பணியாற்றியது. | 10 |
| 4. | பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் இன மக்களுக்கு விலையில்லா வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொண்டது. | 10 |
| 5. | பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை முழுமையாக பயன்படுத்தியது மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்தியது. | 10 |
| 6. | முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள் / மக்கள் குறை தீர் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன்கீழ் பெறப்பட்ட மனுக்கள் குறித்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டது. | 10 |
| 7. | அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் புதிய திட்டங்களை உடனுக்குடன் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டது. | 10 |
| 8. | மாவட்ட நிர்வாகம் மற்றும் விடுதிகள் நிர்வாகத்தை சிறப்பாக செயல்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட புதுமையான நடவடிக்கை (Innovative measures). | 10 |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககங்கள் மூலம் கோரப்படும் விவரங்களை உடனுக்குடன் இயக்ககங்களுக்கு அனுப்பிட நடவடிக்கை மேற்கொண்டது. | 10 |
| 10. | விடுதிகளில் மரம் நடுவது / தோட்டங்கள் ஏற்படுத்துதல் மற்றும் விடுதிகளை துய்மையாக பராமரிக்க நடவடிக்கை மேற்கொண்டது. | 10 |
| | **மொத்தம்** | **100** |

7. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்படும்:

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 001 – நெறிப்படுத்தலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள்– AA – தலைமையிடப் பணியாளர் – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல இயக்ககம் – 359 – பரிசுகளும் வெகுமதிகளும் – 01 – பரிசுகளும் வெகுமதிகளும்" (IFHRMS DPC 2225 – 03 – 001 – AA – 35901)

8. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை, அதன் அலுவல் சார்பற்ற எண். 48139/ நிதி (பி, மி.பி (ம) சிந) / 2021, நாள் 03.11.2021–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–05.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்,
சென்னை–05.
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை–05.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–08.
மாநில கணக்காயர், சென்னை–18.
<u>நகல்:</u>–
நிதி(பி,மிபி(ம)சிந/ வ.செ.பொ.II)த் துறை, சென்னை–09.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை–09.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–09.

அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்